**மன்னார் நகர சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 28 பெப்ரவரி 2020 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 17 யூன் 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 24 ஆகஸ்ட் 2020 ஆந் திகதியும் சபையின் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து மன்னார் நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டில் நகரசபையினால் பெறப்படவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 4,401,606 மற்றும் முத்திரைத் தீர்வை ரூபா 13,886,820ஆனது வருமான செலவுக் கணக்கில் காட்டப்பட்ட போதும் நிதிநிலைமைக்கூற்றில் அரச கடனாளிகள் கணக்கில் கூட்டு மொத்தம் ரூபா.18,288,426 உள்ளடக்கப்படாது பின்வரும் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. | 2020 ஆண்டுக்கான இறுதிக்கணக்கில் நாட்குறிப்பு மூலம் சீராக்கம் செய்யப்படும் | மீளாய்வாண்டுக்கான வருமானங்களில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியவை நிதிக்கூற்றில் காட்டப்படல் வேண்டும். |
| • மீளாய்வாண்டில் நகரசபையினால் நிலையான வைப்பாக வைப்பிலிடப்பட்ட தொகை ரூபா 10,000,000 மூலதன செலவினமாக காட்டப்பட்டதால் நிதிக்கூற்றுகளில் திரண்டநிதிக்கணக்கானது குறைத்துக் காட்டப்பட்டிருந்தது | மீளாய்வாண்டில் வருமானச்செலவுக்கணக்கில் தவறுதலாக நிலையான வைப்பிலிடப்பட்ட தொகை தொகை ரூபா 10,000,000. ஆனது மூலதனச் செலவீனத்தில் மேலதிகமாக காட்டப்படாது 2020 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்யப்படும் | |

| | | | |
|---|---|---|---|
| • | LGIIP மூலம் பெறப்பட்ட Tipper, Roller,JCB மூலம் பெறப்பட வேண்டிய வருமானம் ரூபா.5,197,263 வருமானக்கணக்கில் காட்டப்பட்டிராததினால் நிதிக்கூற்றுக்களில் திரண்டநிதிக்கணக்கானது குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வு ஆண்டு இறுதிக் கணக்கறிக்கையில்தவறுதலாக Tipper மற்றும் JCP ஆகிய 03 வாகனங்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 5,197,263. வருமானச் செலவுக்கணக்கில் உள்ளடக்கப்படாமையினால் வருமானம் குறைவாக காட்டப்பட்டுள்ளது. | |
| • | PSDG மூலம் பெறப்பட்ட ரூபா 3,037,162 ஆனது மூலதன மானியக்கணக்கில் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததால் நிதிக்கூற்றுக்களில் திரண்டநிதிக்கணக்கானது குறைத்துக் காட்டப்பட்டிருந்தது | மீளாய்வு ஆண்டில்PSDG நிதி முலத்தின் மூலமாக கிடைக்கப்பெற்ற ரூபா 3,037,162. ஆனது மூலதன மானியக்கணக்கில் உள்ளடக்கப்பட்ட போதும் தவறுதலாக வருமானச் செலவுக்கணக்கில் உள்ளடக்கப்படாமையினால் வருமானம் குறைவாக காட்டப்பட்டுள்ளது. | |
| • | மீளளிக்ககூடிய வைப்பு ரூபா 54,000 ஆனது நடப்புக்கணக்கில் காட்டப்படாது விடுபட்டிருந்தது. | மீளளிக்கக்கூடிய வைப்பு ரூபா 54,000.00 தவறுதலாக நானாவீத வைப்புக்கணக்கில் உள்ளடக்கப்படவில்லை. | |
| (ii) | மீளாய்வாண்டின் வருமானச் செலவினக் கணக்கில் பொதுப் பயன்பாட்டுச் சேவைகளின் கீழான வாடகை வருமானம் ரூபா 21,696,392 பொதுப் பயன்பாட்டுச் சேவைகளின் மீதான உரிமங்களாக காட்டப்பட்டுள்ளமையால் வருமானச் செலவினக் கணக்கில் வாடகை வருமானம் ரூபா 21,696,392 இனால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளதோடு இத்தொகையால் உரிமங்கள் கூட்டிக் காட்டப்பட்டுள்ளது. | எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாது என்பதனை தயவுடன் தங்களிற்கு அறியத்தருகின்றேன் | உரிய வருமானங்கள் உரிய வருமானத்தலைப்பின் கீழ் காட்டப்படல் வேண்டும். |
| (iii) | நகர சபையின் காணிகளும் கட்டடங்களினதும் பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 10,000,000 பெறுமதியுள்ள ஆயுர்வேத மூலிகைப்பூங்கா சபைக்குரியதாக இல்லாதபோதும் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | 2020 வருட கணக்கறிக்கையிலிருந்து குறித்த காணியினை நீக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். | சபைக்குரிய சொத்துக்கள் மட்டும் நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும் |

## 1.4 இணக்கமின்மை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் | | | |
| (i)இலக்கம் 371 | ஏழு ஆண்டுகளுக்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்பட்டிராத ரூபா 1,548,818 பெறுமதியான 07 முற்பணங்கள் தொடர்பாக சபையினால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்யப்படாத 07 முற்பணங்களினை தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் உரியநடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ii)இலக்கம் 571 | ஒப்பந்த வைப்புக்களில் இரண்டு தொடக்கம் நான்கு ஆண்டுகளுக்கு மேலான காலம் கடந்த வைப்புக்கள் ரூபா 261,233 தொடர்பாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலம் கடந்த வைப்புக்களினை வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 52,657,844 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 54,345,454 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | 31.12.2019 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | 31.12.2018 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரிகளும் வரிகளும் | 17,100,000 | 13,896,335 | 22,891,378 | 17,055,000 | 18,329,289 | 18,867,241 |
| ii. | வாடகைகள் | 40,852,750 | 21,399,408 | 4,238,289 | 28,269,300 | 37,065,155 | 5,309,954 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,160,000 | 23,269,501 | - | 1,340,000 | 1,422,159 | - |
| iv. | ஏனைய வருமானம் | 21,635,000 | 31,458,963 | 4,886,817 | 18,086,500 | 26,508,501 | 23,550,648 |
| | | **80,747,750** | **90,024,207** | **32,016,574** | **64,750,800** | **83,325,104** | **47,727,843** |

### 2.2.2 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபைக்குச் சொந்தமான கட்டடத்தை வாடகைக்கு கொடுத்தமையால் சதொச வியாபார நிலையத்தினரிடமிருந்து பெறப்படவேண்டிய வாடகை நிலுவை ரூபா 138,290 ஆனது 05 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படாததுடன் இதனை அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | நீண்ட காலமாக அறவிடப்படாத வாடகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 2.2.3 வீத வரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபை கட்டளைச்சட்டம் அத்தியாயம் 255 இன் பிரிவு 160 இன் படி வீத வரிகள் நிலவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 19,700,961 நகரசபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மானிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் மீது அறவிடப்பட வேண்டிய வீத வரிகள் அறவிப்பட்டிருக்கவில்லை | அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | சபையினால்நீண்ட காலமாக அறவிடப்படாத வீத வரிகளின் நிலுவைகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**2.2.4 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

**(அ) நீதி மன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல்உள்ளவாறு ரூபா 4,751,854 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களை பெறப்பட வேண்டியிருந்தன | அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | உரிய காலத்தில் நீதிமன்ற தண்டப்பணங்களை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து ரூபா 18,423,479 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்படவேண்டியிருந்தன | அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | உரிய காலத்தில் முத்திரை தீர்வையை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4ஆம்பிரிவின் பிரகாரம், பொது சுகாதாரம்,பொதுப் பயன்பாடு சேவைகள் மற்றும் பொது வழிகள் மற்றும் மக்கள் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய க.செ.பொது/2018/61 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக்கு கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களை பாதுகாப்பதுடன் நிலைத்திருக்கும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் கடல், கடலோர மாசு கட்டுப்பாடுகள் தொடர்பான திட்டங்கள் எவையும் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கு உரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு தொடக்கம் பதினான்கு ஆண்டுகளுக்கு மேலாக சபைக்கு சொந்தமான மாட்டிறைச்சிக் கடை, தினச்சந்தை, வாகனத் தரிப்பிட குத்தகை, மற்றும் நவீன மீன் சந்தை குத்தகை என்பவற்றின் மூலம் வருமதியான குத்தகை நிலுவை ரூபா 1,791,696 இனை அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | உரிய காலத்தில் வருமானங்கள் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ) பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| சபையினது 15 ஆளணியினருக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிராமையால் அத்தகையவர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்திருக்கக்கூடிய வேலைகள் பாதிப்படைந்திருந்தன | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உரிய காலத்தினுள் சபையினால் வெற்றிடங்களை நிரப்ப சபையினால்உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| **(ஆ) ஊழியர் கடன்கள்** | | |
| (i)மன்னார் நகரசபையில் சேவையாற்றி பதவியிலிருந்து தானாக விலகியமை, சேவை இடைநிறுத்தம் மற்றும் ஓய்வு பெறல் போன்ற காரணங்களுக்காக நான்கு ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படவேண்டிய 05 ஊழியர்களின் கடன்மீதி ரூபா 421,454 தொடர்பாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த ஊழியர்களின பணிக்கொடையிலிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய காலத்தினுள் ஊழியர் கடன் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ii)மீளாய்வாண்டில் சேவையிலிருந்து தானாக விலகியமையால் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் கடன் நிலுவை ரூபா 191,862 ஆனது தற்போது சேவையில் உள்ளவர்களின் நிரலில் காட்டப்பட்டுள்ளது | குறித்த நிலுவைகள் தற்போது பதவி வறிதாக்கப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது | கடன் நிலுவைகள் உரிய வகுதிகளின் கீழ் காட்டப்படல் வேண்டும் |

**(இ) ஊழியர் பிணைகள்**

| | | |
|---|---|---|
| (i) PF/01/2017 இலக்க 04 மார்ச் 2017 ஆந் திகதிய மாகாண நிதிச் சுற்றுநிருபத்தின் பந்தி 06 இன்படி பிணைப்பணம் செலுத்திய அலுவலர் பிறிதொரு அமைச்சிற்கு அல்லது திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்படும் போது அது பற்றிய முழு விபரங்களும் ஆவணங்களும் உரிய அமைச்சிற்கு அல்லது திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். எனினும் நகர சபையிலிருந்து பல்வேறு காரணங்களுக்காகவும் 03 உத்தியோகத்தர்களின் விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | அலுவலர்களின் ஊழியர் பிணைப்பணம் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கணக்குகளிலிருந்து சீர்செய்யப்படும் என்பதனை தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றேன். | சுற்று நிருபத்திற்கமைவாக உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) PF/01/2017 இலக்க 04 மாரச் 2017 ஆந் திகதிய மாகாண நிதிச் சுற்று நிருபத்தின்படி பிணைப்பணம் செலுத்தப்படவேண்டிய உத்தியோகத்தர்கள் செலுத்தவேண்டிய ஆகக் குறைந்த ஊழியர் பிணைத் தொகை ரூபா 317,500 செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 185,000 குறைவாக செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | PF/01/2017 இலக்க (அ) 04 மார்ச் 2017 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கமைய குறித்த தொகையினை மீளமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். | சுற்று நிருபத்திற்கமைவாக உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.4 சொத்துமுகாமைத்துவம்

### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான பன்னிரண்டு வாகனங்கள் ஐந்து வருடங்களுக்கு மேலாக திருத்தப்பட வேண்டியிருந்த போதும் இது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த 12 வாகனங்களில் திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய வாகனங்கள் திருத்தம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதுடன் திருத்தம் செய்ய முடியாத ஏனைய வாகனங்களை பாவனையிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றேன். | வாகனங்களின் பாதுகாப்பு தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையின் பயன்பாட்டில் காணப்படுகின்ற ரூபா 8,188,000 பெறுமதியான 06 வாகனங்களின் உரிமை மாற்றம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரிமை மாற்றம் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது | வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றப்படல் வேண்டும் |
| (ஆ) சபையின் பயன்பாட்டில் இருந்து வரும் ரூபா 31,100,000 பெறுமதியான 03 கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் உரிமையை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்ள ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | சபையின் காணிகள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றப்படல் வேண்டும் |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையின் வட்டிக் கொடுப்பனவு 237 வீதத்தினாலும் ஏற்றியிறக்கல் தொடர்பிணைப்பானது 50 வீதத்தினாலும் மதிப்பீட்டு செலவினத்தை விஞ்சியிருந்தமையானது வினைத்திறனற்றதாக பாதீட்டு தயாரிப்பை வெளிப்படுத்துகின்றது | எதிர்காலத்தில் பாதீடு தயாரிக்கப்படும் போது உண்மைச் செலவீனத்திற்கும் பாதீட்டுக்கும் வேறுபாடு இல்லாத முறையில் தயாரிக்கப்படும் | பாதீடானது சரியான முறையில் தயாரிக்கப்படல் வேண்டும் |